# தேசிய லொத்தர் சபை- 2010

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட உயர்ந்த பட்ச தகவல்கள் மற்றும் விளக்கங்களின் பிரகாரம் தேசிய லொத்தர் சபை 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கு உரிய கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேசிய லொத்தர் சபையின் நிலைவரம், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாடுகள் மீதான நிதிசார் விளைவுகள் மற்றும் காசோட்டம் என்பவற்றை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 12 கடன்பட்டோரிடம் இருந்து பெறவேண்டிய ரூபா 25,677,753 தொகை 5 ஆண்டுகளுக்கு மேலாக பழமையாகவுள்ளதுடன் அத் தொகையை அறவிட்டுக்கொள்வதற்குப் போதிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஓர் முகவரிடம் இருந்து ஒரு வருடத்திற்கு மேலாக அறவிடப்படவேண்டிய தொகையாக ரூபா 545,926 காணப்பட்ட போதிலும் அத் தொகையை அறவிட்டுக்கொள்வதற்குப் போதிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) செவன லொத்தர் முகவர்களால் சபைக்கு வழங்கப்பட்ட மதிப்பிழந்த காசோலைகள் தொடர்பான பணம் ரூபா 1,490,445 தொகை 14 ஆண்டு காலமாக அறவிடப்பட முடியாதிருந்தது.

**1.2.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

ரூபா 293,504,383 தொகையான டிக்கட்களின் அச்சீட்டுச் செலவினம், ரூபா 144,286,796 தொகையான வெளியீட்டுச் செலவினம் மற்றும் ரூபா 34,734,079 தொகையான கடன்பட்டோர் என்பன எழுத்து மூல உடன்படிக்கைகள், கேள்வி ஆவணங்கள் மற்றும் மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் போன்றன கிடைக்கப்பெறாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது அவ்விடயம் தொடர்பில், 2011 யூன் 7 ஆந் திகதிய சபைத் தலைவருடைய கடிதம் மூலம் வெளியீட்டுச் செலவினம் மற்றும் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பில் சபை சிறந்த நடைமுறையை பின்பற்றுகின்றதென எனக்கு தெரிவித்திருந்தார்.

**1.2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முதலியவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 1997 இன் 35 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 1963 இன் 11 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் - 20 ஆம் பிரிவு | 2008 ஆகஸ்ட் 22 ஆம் திகதிய சட்ட வரைஞருக்கு சமர்ப்பிக்கப்பட்ட வரைபு பிரமாணங்களின் பிரகாரம் நிதி ஒதுக்கீடு மற்றும் பரிசு அமைப்பு செய்யப்பட்டிருந்தது. இவ் பிரமாணங்கள் இற்றைவரை வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 502 உடன் | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேடு சபையால் பேணப்பட்டிருக்கவில்லை. மெய்மையாய்வு மீதி நிலையான சொத்து மீதியுடன் |

| | | |
|---|---|---|
| | தொடர்பான 11 ஆம் அத்தியாயத்தின் மூன்றாம் பட்டோலை | சீராக்கப்பட்டிராமையால் காணாமற்போன மற்றும் தொலைந்த பொருட்கள் சொத்துக்களிற்கு நேர்ந்த இழப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை 9 ஆம் அத்தியாயத்தின் 9.7 ஆம் பந்தி | சபையின் ஊழியர்களுக்குச் செலுத்தப்பட்ட போக்குவரத்துப் படிப்பணத்திற்கு திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்களின் 5.4.4 ஆம் பிரிவு | வழிகாட்டியின் படி வேலைகள் மற்றும் சேவைகளுக்காகச் செலுத்தப்படக் கூடிய ஆகக்கூடுதலான முற்பணத் தொகை ஒப்பந்தத்தொகையின் 20 சதவீதத்தை விஞ்சலாகாது. இருப்பினும், குறித்த எல்லையை விஞ்சி முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. |

### 1.2.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்

ஊழியர்களின் மருத்துவப் பட்டியல்களின் மீளளிப்பதற்கான காப்புறுதி கம்பனியுடன் பேணப்பட்ட காப்புறுதித் திட்டமிற்குப் பதிலாக மீளாய்வாண்டில் சபை ஊழியர்களின் மருத்துவப் பட்டியல் மீளளிப்பதற்காக ஓர் சபை நிதியம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு தொடர்பாக இவ் நோக்கத்திற்கான செலவினமாக நிதிக் கூற்றுக்களில் ரூபா 15,000,000 பதியப்பட்டிருந்தது. வங்கிக் கணக்கொன்றில் இத் தொகை வைப்புச்செய்யப்பட்டிருந்ததுடன் அவ் வைப்பில் இருந்து கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

சபையின் நிதிக் கட்டுப்பாட்டிற்கு அப்பால் சபை நிதியத்தைப் பயன்படுத்தும் இயலுமையை இது விளைவித்திருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான இக் கணக்கில் மீதியான ரூபா 3,986,916 நிதிக் கூற்றுக்களில் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை. ஆகையால் நிதியத்தின் செலவினம் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டதுடன் காசு மீதி அதே தொகையால் சேர்த்துக் காட்டப்பட்டிருந்தது.

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் மீளாய்வு

#### 2.1.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், சபையின் மீளாய்வாண்டிற்கான செயற்பாடுகள் வரிக்கு பின்னரான ரூபா 31,637,890 தேறிய மிகையினை விளைவித்திருந்ததுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான தேறிய மிகை ரூபா 45,512,371 ஆக இருந்தமை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 13,874,481 ஆன வீழ்ச்சியை ஏற்பட்டிருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சி 30.5 சதவீதமாகக் காணப்பட்டது.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் விற்பனை வருமானம் அதிகரித்திருந்த போதிலும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 32,401,850 தொகையால் வரிக்கான ஏற்பாட்டின் அதிகரிப்புக் காரணமாக நிதிசார் விளைவுகளில் வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது.

முன்னைய ஆண்டில் வரிக்காக ரூபா 164,941,354 தொகையான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் உள்ளபடியாகச் செலுத்தப்பட்ட வரித் தொகை ரூபா 198,991,306 ஆகக் காணப்பட்டது. ஆகையால் ரூபா 34,049,952 தொகையான வரிக்கான குறை ஏற்பாட்டின் சீராக்கத்தை அடுத்து முன்னைய ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்ட ரூபா 79,562,323 தொகையான நிதிசார் விளைவுகள் ரூபா 45,512,371 வரை குறைவடைந்திருந்தன.

**2.1.2 பகுப்பாய்வுரீதியான நிதிசார் மீளாய்வு**

(அ) பின்வரும் விடயங்களின் கீழ் செலவினங்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்படுகையில் அதிகரித்திருந்தன.

| | | முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் செலவின் அதிகரிப்பு | முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அதிகரிப்பின் சதவீதம் |
|---|---|---|---|
| | | ரூபா | % |
| (i) | பணிக்கொடை | 21,668,831 | 271.37 |
| (ii) | மோட்டார் வாகனங்களின் பழுதுபார்த்தல்களும் பராமரிப்பும் | 3,837,049 | 47.29 |
| (iii) | உசாவுகை மற்றும் திறன்தொழில் கட்டணங்கள் | 426,764 | 15.87 |
| (iv) | மோட்டார் வாகன வாடகைக் கட்டணங்கள் | 2,730,057 | 197.07 |
| (v) | பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்புச் செலவினங்கள் | 4,753,298 | 177.81 |
| (vi) | சுத்திகரிப்பு மற்றும் பராமரிப்புச் செலவினங்கள் | 781,575 | 71.33 |
| (vii) | அலுவலக நவீனமயமாக்கல் செலவினம் | 3,008,977 | 159.08 |
| (viii) | நிகழ்ச்சித்திட்டங்கள் தயாரிப்பு மற்றும் ஒளிபரப்புச் செலவினம் மீதான விளம்பரம் | 30,476,570 | 39.94 |
| (ix) | ஒன்றிணைந்த விளம்பரப்படுத்தல் | 43,265,994 | 47.17 |
| (x) | தொலைபேசி மற்றும் இணையதளவசதிச் செலவினம் | 1,890,292 | 18.37 |
| (xi) | ரிக்கெட் போக்குவரத்துக் கட்டணங்கள் | 863,962 | 24.65 |
| (xii) | மோட்டார் வாகனத்திற்கான எரிபொருள் மீதான செலவினம் | 1,069,846 | 12.86 |

அத்தகைய அதிகரிப்புகளுக்கான காரணங்களைக் கண்டறிவதற்கு மேற்குறித்த (i), (iv), (v), (vi) மற்றும் (vii) இன் கீழான அசாதாரண அதிகரிப்பை சபை மீளாய்வு செய்திருக்கவில்லை.

(ஆ) திரட்டுநிதிக்கும் ஏனைய நியதிச்சட்ட நிதியத்திற்கும் கடந்த ஐந்து ஆண்டுகளின் போது தேசிய லொத்தர் சபையினால் வருடாந்தம் அனுப்பி வைக்கப்பட்டவை அதே காலப்பகுதியின் போது தேசிய லொத்தர் சபையுடன் லொத்தர் சீட்டுக்களின் விற்பனையில் போட்டியிடும் ஓர் நிறுவகமான அபிவிருத்தி லொத்தர் சபையால் வருடாந்தம் சனாதிபதி நிதியத்திற்கும் ஏனைய நியதிச்சட்ட நிதியங்களுக்கும் லொத்தர் சீட்டுக்களின் விற்பனை ஒப்பிட்டு அவ்வாறு அனுப்பி வைக்கப்பட்டவை குறித்த நிறுவகங்களினால் லொத்தர் சீட்டுக்களின் விற்பனையின் சதவீதமாக கீழே தரப்பட்டுள்ளன.

| ஆண்டு | தேசிய லொத்தர் சபை | | | அபிவிருத்தி லொத்தர் சபை | | |
|---|---|---|---|---|---|---|
| | லொத்தர் சீட்டுக்களின் விற்பனையில் இருந்தான வருமானம் | திரட்டுநிதிக்கும் ஏனைய நியதிச்சட்ட நிதியத்திற்கும் அனுப்பி வைக்கப்பட்டவை | விற்பனையின் சதவீதமாக திரட்டுநிதிக்கும் ஏனைய நியதிச்சட்ட நிதியத்திற்கும் அனுப்பி வைக்கப்பட்டவை | லொத்தர் சீட்டுக்களின் விற்பனையில் இருந்தான வருமானம் | திரட்டுநிதிக்கும் ஏனைய நியதிச்சட்ட நிதியத்திற்கும் அனுப்பி வைக்கப்பட்டவை | விற்பனையின் சதவீதமாக திரட்டுநிதிக்கும் ஏனைய நியதிச்சட்ட நிதியத்திற்கும் அனுப்பி வைக்கப்பட்டவை |
| | ரூபா | ரூபா | | ரூபா | ரூபா | |
| 2006 | 6,166,031,736 | 967,282,580 | 15.69 | 3,761,749,339 | 942,467,000 | 25.05 |
| 2007 | 5,799,100,996 | 767,590,790 | 13.24 | 3,947,213,671 | 845,327,000 | 21.42 |
| 2008 | 6,534,404,643 | 898,282,571 | 13.75 | 4,259,779,178 | 655,883,000 | 15.40 |
| 2009 | 8,123,312,024 | 1,136,298,465 | 13.99 | 4,886,477,659 | 735,001,000 | 15.04 |
| 2010 | 8,360,978,554 | 1,189,460,051 | 14.22 | 5,266,907,459 | 888,511,000 | 16.87 |

மேற்குறித்த கூற்றின் பிரகாரம், அபிவிருத்தி லொத்தர் சபையால் வருடாந்தம் சனாதிபதி நிதியத்திற்கும் ஏனைய நியதிச்சட்ட நிதியங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்ட லொத்தர் சீட்டுக்களின் விற்பனையில் இருந்து அனுப்பிவைக்கப்பட்டவை தேசிய லொத்தர் சபையினால் திரட்டுநிதிக்கும் ஏனைய நியதிச்சட்ட நிதியத்திற்கும் அனுப்பி வைக்கப்பட்டவற்றைவிட கூடுதலான சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தின.

திரட்டு நிதியப் பங்களிப்பு மிகவும் குறைவானமைக்குச் சபையின் செலவினக் கட்டமைப்பின் மீளாய்விற்கான அவசரத் தேவைப்பாடும் அது படிப்படியாக ஆண்டுகளின் போது குறைவடைந்தமையும் கணக்காய்வில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

**(இ) விகிதங்களும் வீதங்களும்**

கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம், மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டிற்கானதுமான சபையின் செயற்பாடுகள் தொடர்பாக சில முக்கிய பல விகிதங்கள் பின்வருமாறாகும்.

| | | | ஆண்டுகள் | |
|---|---|---|---|---|
| | | | **2010** | **2009** |
| | | | **%** | **%** |
| (i) | | இலாப விகிதம் | | |
| | i | தேறிய இலாப விகிதம் | 2.96 | 2.85 |
| | ii | மூலதனத்திற்கான வருவாய் | 1.99 | 2.90 |
| | iii | சராசரிச் சொத்துக்களின் மீதான வருவாய் | 1.19 | 1.58 |
| (ii) | | மூலதன போதுமானதன்மை | | |
| | i | உரிமை மூலதனம்/ மொத்தச் சொத்துக்கள் | 0.59 | 0.63 |
| | ii | உரிமை மூலதனம்/ நடைமுறையல்லாப் பொறுப்புக்கள் | 20.35 | 39.60 |

(iii) திரவச் சொத்துக்கள்

---------------------------------

| | | | |
|---|---|---|---|
| i | நடைமுறைச் சொத்து விகிதம் | 2.23 | 2.35 |
| ii | திரவச் சொத்து விகிதம் | 2.16 | 2.28 |

## 2.2 செயற்பாட்டு மீளாய்வு

---------------------------------

### 2.2.1 விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 777,776 பெறுமதியான வெளியீட்டுப் பொருட்களின் இருப்பில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 99,325 பெறுமதியான ஜீ.ஐ பைப்களின் இருப்பு பௌதீக மெய்மையாய்வின் போது இருக்கவில்லை. இழப்புகள் ஆராயப்பட்டிருக்கவில்லை. ரூபா 678,451 பெறுமதியான தங்க நாணயங்களின் இருப்பு வெளியீட்டு நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படாது 05 ஆண்டுகளுக்கு மேலான காலமாக களஞ்சியத்தில் காணப்பட்டது. அவற்றின் சந்தைப் பெறுமதி கணக்குகளில் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிக்கூற்றுக்களில் கணணிகளின் இருப்பாக காண்பிக்கப்பட்ட ரூபா 77,000 பெறுமதியில் தலா ஒரு அச்சீட்டு இயந்திரம் ரூபா 3.750 இல் 2003 சனவரி 23 அன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்த பயன்படுத்தப்படாத 6 அச்சீட்டு இயந்திரங்களும் ஓர் முகவரால் தவனைப்பணம் செலுத்தப்படாததன் காரணமாக அறவிடப்பட்ட ரூபா 54,500 பெறுமதியான ஓர் கணணியும் உள்ளடங்கியிருந்தது. அக்கணணி இருப்பில் பௌதீக ரீதியாக இல்லாதிருந்த அதேவேளை சபையால் பெறப்பட்டமைக்கும் எவ்வித சான்றுகளும் இருக்கவில்லை. இழப்புக்கள் ஆராயப்பட்டிருக்கவில்லை.

(இ) 2009 ஆம் ஆண்டில் தலா ரூபா 341,340 இல் ரூபா 2,048,040 இற்கு செய்யப்பட்ட கொள்வனவு ஆறு முச்சக்கர வண்டிகள் பயன்படுத்தப்பட முடியாத நிலையில் காணப்பட்டன. உரிய காலத்திற்கு முன்னர் பழுதடைவிற்கான காரணங்களைக் கண்டறிவதற்கான ஆய்வை சபையால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஒரு மோட்டார் சைக்கிள் தலா ரூபா 99,000 கிரயத்தில் ரூபா 1,584,000 பெறுமதியான பதினாறு மோட்டார் சைக்கிள்கள் களஞ்சியத்தில் பயன்படுத்தப்படாத நிலையில் காணப்பட்டன. கொள்வனவிற்காக தேவைப்பாடும் விளைவற்றுள்ளமைக்கான காரணங்களும் ஆராயப்பட்டிருக்கவில்லை. தலா ஒரு சைக்கிள் ரூபா 7,162 கிரயமாக ரூபா 931,000 பெறுமதியான 130 சைக்கிள்களின் இருப்பு களஞ்சியத்தில் விலைவற்றுக் காணப்பட்டன.

(உ) ஒரு சீருடை தலா ரூபா 395 படி கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 3,675,080 பெறுமதியான முகவர்களின் சீருடை இருப்புக்களை கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது 2008 ஆம் ஆண்டு முதல் களஞ்சியத்தில் காணப்பட்டது.

(ஊ) இவ் அறிக்கைத் திகதி வரை “கொழும்பு எயர்போட் சுபர் டிரோ” இற்கான 2007 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 15,436,511 பெறுமதியான ஓர் பீஎம்டபிள்யூ மோட்டார் வாகனம் இற்றை வரை விளைவற்றுக் காணப்பட்டது. செவன லொத்தருக்காக ஓர் பரிசு வழங்கப்படுவதற்காக 2008 ஆம் ஆண்டில் ரூபா 1,249,000 இற்காக கொள்வனவு செய்யப்பட்ட ஓர் வாகனம் மீளாய்வாண்டின் இறுதி வரை விளைவற்றுக்காணப்பட்டது. காசு வளங்களில் ஆக்கபூர்வமற்ற பயன்பாட்டினை விளைவித்திருந்தது.

### 2.2.2 இணங்கானப்பட்ட இழப்புக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சபையின் ஓர் ஊழியராகச் செயற்பட்ட ஓர் முகவரிடம் இருந்து பெறவேண்டிய ரூபா 1,538,785 தொகையின் அறவீட்டிற்காகத் தொடர்புபட்ட ஓர் வழக்கின் தீர்ப்பின்படி, அத் தொகை அறவிடப்பட முடியாதவையாக இருந்தது. இருப்பினும் அத் தொகை கணக்குப் புத்தங்களில் தேவையான நடவடிக்கைகளை செய்யாமல் நிதிக் கூற்றுக்களில் கடன்பட்டோரின் கீழ் காண்பிக்கப்பட்டது.

(ஆ) நான்கு கடன்பட்டோர் மீதிகள் நீண்டகாலமாக அறவிடப்படுவதற்கான சட்ட நடவடிக்கை எடுக்கத் தவறியதன் காரணமாக அறவிடவேண்டிய ரூபா 13,481,567 கூட்டுத்தொகை அறவிடமுடியாத போதிலும் கணக்குகளில் உரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாது கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தன.

### 2.2.3 மனித வள முகாமைத்துவம்

சபை 272 நபர்களை வேலைக்கு அமர்த்தியிருந்த அதேவேளை அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் கோப்பு 262 மாத்திரமேயாக இருந்தது. 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான ஊழியர் கோப்பையும் வெற்றிடம்/ மிகை நிலைகளையும் பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

| ஊழியர் வகுதி | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான எண்ணிக்கை | வெற்றிடங்கள் | மிகை |
|---|---|---|---|---|
| நிறைவேற்றுத் தரங்கள் | 28 | 24 | 04 | - |
| நிறைவேற்றுனர் அல்லாத தரங்கள் | 234 | 227 | 07 | - |
| ஒப்பந்த அடிப்படை | - | 20 | - | 20 |
| ஏனையவர்கள் | - | 01 | - | 01 |
| **மொத்தம்** | **262** | **272** | **11** | **21** |

### 2.2.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடிடப்பட்டவற்றிற்கும் உள்ளபடியானவைகளுக்கும் இடையே குறிப்பிடத்தக்க முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது சிறந்த முகாமைத்துவக் கட்டுபாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதனைச் சுட்டிக்காட்டுகின்றது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் வழங்கப்பட்ட எனது விபரமான கணக்காய்வு அறிக்கையின் மூலம் சபையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) நிலையான சொத்துக்கள்

(ஆ) எரிபொருட் செலவினங்கள்

(இ) கணனி மயமாக்கப்பட்ட தகவல் முறை

(உ) களஞ்சியப் பதிவேடுகள்

(ஊ) கொள்வனவுகள்